# தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம்

## உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு சிறு தொகுப்பு


### உயிரிப்பல்வகைமை என்றால் என்ன ?

உயிரிப்பல்வகைமை என்பது ஒரு குறிப்பிட்ட சூழலுக்குள் பரிணமித்த எல்லா உயிரிகளையும் அவற்றின் வேறுபாடுகளையும் உள்ளடக்கிய ஒரு பரந்த கருதுகோளாகும். உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலையின்படி உயிரிப்பல்வகைமை என்பது நில, கடல், நீர் சூழல் மண்டலங்களையும் சூழல் கூட்டமைவுகளின் பகுதியான உயிரிகளில் எல்லா வேறுபாடுகளையும் குறிக்கிறது. இவ்வேறுபாடுகள் சிற்றினங்களுக்கு உள்ளோ இடையிலோ சூழல் மண்டலங்களுக்கு உள்ளோ இடையிலோ அமைந்தவை.



### உயிரிப்பல்வகைமையின் முக்கியத்துவம்

- பல உயிரினங்கள் ஒன்றோடு ஒன்று சார்ந்து வாழ்கின்றன
- உயிரிப்பல்வகைமை சூழலியல் சமநிலைக்கு வழிவகுக்கின்றன
- உயிரிப்பல்வகைமையின் மூலம் நமக்கு கிடைக்கப்பெறும் எண்ணற்ற மதிப்புமிக்க உயிரியல் வளங்கள்
- அதன் கலாச்சார மதிப்பு
- ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கு உயிரிப்பல்வகைமை இன்றியமையாதது



# உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு சிறு தொகுப்பு

## உயிரியல் பல்வகைமைச்சட்டம் 2002

செயல்படுத்தும் நிறுவனம்

தேசிய அளவில்
**தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையம்**

மாநில அளவில்
**தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம்**

உள்ளாட்சி அளவில்
**உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு**

### முக்கிய குறிக்கோள்கள்

- உயிரிப்பல்வகைமை பாதுகாப்பு
- வளங்களை நீடித்து நிலைக்க வழி வகுத்தல்
- வளங்களை உபயோகப்படுத்தும் போது அதன் மூலம் பெறப்படும் லாபத்தின் நியாயமான பங்கை மக்களுக்கு கொடுக்க வழி வகுத்தல்

## உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு


உயிரியல் பல்வகைமைச்சட்டத்தின் 41 பிரிவின்படி ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் அதன் பகுதிக்குள்ளாக ஒரு உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுவை (BMC) அமைக்க வேண்டும்



உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுவை (BMC) சம்மந்தப்பட்ட உள்ளாட்சிகள் மன்ற கூட்டத்தின்(COUNCIL) தீர்மானத்தின் படி அமைக்கவேண்டும்.

## அலுவலகம்

உள்ளாட்சி அமைப்பால் வழங்கப்பட்ட அலுவலக வளாகத்திலிருந்து உயிரிப்பல்வகைமை மேலாண்மைக் குழு செயல்படும்




உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு (BMC) | **கட்டமைப்பு**




- உறுப்பினர்கள் - **7**
- தலைவர் - **1** (உறுப்பினர்களில் ஒருவர்)
- பெண் உறுப்பினர்கள் - **1/3**
- **SC/ST** உறுப்பினர்கள் - **18%**

# உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு சிறு தொகுப்பு

**BMC பதவிக்காலம்** | 5 ஆண்டுகள்அல்லது சம்மந்தப்பட்ட உள்ளாட்சிகளோடு ஒன்றி அமையும்

**உறுப்பினர் தகுதி** | சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்க வேண்டும்



**BMC தலைவர்**

- பதவிக்காலம் - 3 ஆண்டுகள்
- 7 உறுப்பினர்களில் ஒருவர் - உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்
- கூட்டத்திற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் தலைவர் தலைமை வகிப்பார்
- சமநிலை ஏற்பட்டால் தலைவர் ஒரு வாக்கு அளித்து தேர்ந்தெடுப்பார்
- உள்ளாட்சித் தலைவர் - BMC யின் பதவிவழி உறுப்பினர்



உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு(BMC) **கூட்டம்**



**கூட்டம் கூடுதல்**
வருடத்திற்கு 4 முறை - 3 மாதங்களுக்கு ஒரு முறை




**கூட்டம் தலைமை**
BMC தலைவர் தலைமை இல்லாத போது - உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்



**கூட்டம் குறை நிறைவெண்(Quorum)**
BMC தலைவரையும் சேர்த்து 3 நபர்கள்

## BMC வங்கி கணக்கு - உள்ளூர் உயிரிப்பல்வகைமை நிதி



- உள்ளூர் உயிரிப்பல்வகைமை நிதி - LOCAL BIODIVERSITY FUND (LBF)
- வங்கி கணக்கை உயிரிப்பல்வகைமை மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் செயலாளர் கூட்டாக பராமரிக்க வேண்டும். காசோலைகளில் மேற்சொன்ன அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளர் கையொப்பமிட வேண்டும்.
- BMC செயலாளர், கணக்கு மற்றும் பதிவேடுகளை பாதுகாக்க வேண்டும்.
- வரவு - உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுவினால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் கட்டணங்கள், மாநில அரசு, வாரியம் மற்றும் தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையம் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் மானியங்கள்.

# உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு சிறு தொகுப்பு

## உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுவின் **பொறுப்புகள்**

**முதன்மை மற்றும் முக்கிய பொறுப்பு**

மக்களின் உயிரிப்பல்வகைமை பதிவேடு (PBR) தயாரித்தல், அங்கீகரித்தல் மற்றும் பாதுகாத்தல்

வனப்பகுதிகளுக்கு வெளியில் உயிரியல் வளங்களை (Biological Resources) பாதுகாத்தல் மற்றும் நிலைத்து நீடித்து இருக்க வழிவகை செய்தல்




உள்ளூர் உயிரிப்பல்வகைமையின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு (Eco-Restoration)

அறிவுசார் சொத்துக்கள், பாரம்பரிய அறிவு மற்றும் உள்ளூர் உயிரிப்பல்வகைமை பிரச்சனைகள் தொடர்பாக வாரியம் மற்றும் ஆணையத்திற்கு சரியான பின்னூட்டம் (Feedback) அளிப்பது

பாரம்பரிய மரங்கள், விலங்குகள், நுண்ணுயிரிகள், புனிதத்தோப்புகள் (கோவில் காடுகள்) மற்றும் புனித நீர்நிலைகள் (கோவில் குளங்கள்) உள்ளிட்ட உயிரிப்பல்வகைமை பாரம்பரிய தளங்களை நிர்வகித்தல்

வணிக நோக்கத்திற்காக உயிரியல் வளங்கள் மற்றும் தொடர்புடைய பாரம்பரிய அறிவினை பெறும்போது ஒழுங்குபடுத்துதல்




சட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்கி உயிர் வள ஆதாரங்களின் வணிகரீதியான பயன்பாட்டில் ஏற்படும் பிறர் நுகர்வுரிமையை பகிர்தல்

பொருளாதார ரீதியாக முக்கியமான தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாரம்பரிய வகைகள் மற்றும் இனங்களை பாதுகாத்தல்

உயிரிப்பல்வகைமை கல்வி மற்றும் விழிப்புணர்வு உருவாக்குதல்




உயிர் வளங்களை நீடித்து நிலைக்க (Sustainability) உறுதி செய்தல் மற்றும் அதன் மூலம் பெறப்படும் லாபத்தின் நியாயமான பங்கை மக்களுக்கு கொடுக்க வழி வகுத்தல்



ஆவணப்படுத்தப்பட்ட உயிரியல் வளங்கள் மற்றும் அதனை சார்ந்த பாரம்பரிய அறிவை பாதுகாத்தல்

## உயிர்வளங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல்

- பெறப்படும் உயிர் வளங்களுக்கு கட்டணம் வசூலித்தல்
- உயிரியல் வளங்கள் மற்றும் அதனை சார்ந்த பாரம்பரிய அறிவை அணுகும்போது அதையும் வசூலிக்கப்பட்ட கட்டண விவரங்களையும் ஒரு பதிவேட்டில் ஆவணப்படுத்துதல்

## சமர்ப்பிக்க வேண்டிய முக்கிய ஆவணங்கள்

- BMC கூட்ட தீர்மானம்
- செயல் திட்டம்
- ஆண்டறிக்கை

Content & Design
**PRABAGARAN M**
Program Co-ordinator, TNBB
**AJEETH A N**
NBA-UNDP BSIP Intern, TNBB

© TNBB